


அன்புள்ள தோழர்களே,

தமிழக மின்வாரிய வருவாயின் ஊற்றுக்கண்ணாக இருப்பது கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் என்றால் மிகையல்ல. அத்தகைய இதயத்துடிப்பான கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட அனைத்து நலன்களையும் பாதுகாக்கும் பணியை மின் ஊழியர் மத்திய அமைப்பு செய்து வருகிறது.

கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு தேவையான பணியிடங்களை அமைத்து தருவது, அவர்களுக்கு கணினி, எழுதுபொருட்கள் உட்பட தடையின்றி கிடைப்பதற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு நடவடிக்கை எடுக்கின்ற அதே நேரத்தில் அவர்களுக்கு மற்ற ஊழியர்களுக்கு இணையான பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்குகின்ற வகையில் ஆண்டுக்கு ஆண்டு இருக்கின்ற காலியிடங்களை நிரப்புவதற்கு நடடிவக்கை எடுத்து வருகிறது.

உபகோட்ட அலுவலகத்திற்கு ஒரு உதவி கணக்கீட்டு அலுவலர் பதவியும், மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு முதன்மை கணக்கீட்டு அலுவலரும், மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகங்களுக்கு தலைமை கணக்கீட்டு அலுவலர் பதவியையும் அனுமதித்து கணக்கீட்டுப் பிரிவு பணிகளை அவர்களின் மேற்பார்வையில் கொண்டுவர வேண்டியும், பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்கவும் மின் ஊழியர் மத்திய அமைப்பு அழுத்தமாக வாதிட்டு வருகிறது.

காலி உள்ள வருவாய் மேற்பார்வையாளர், கணக்கீட்டு ஆய்வாளர், கணக்கீட்டாளர் ஆகிய பதவிகளை பதவி உயர்வுகள் மூலம் நிரப்ப வேண்டுமென வாரியத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கணக்கீட்டாளரில் இருந்து கணக்கீட்டு ஆய்வாளர் பதவிக்கும், கணக்கீட்டு ஆய்வாளர் பதவியில் இருந்து வருவாய் மேற்பார்வையாளர் பதவிக்கும் வரையறுக்கப்பட்ட காலவரம்புகள் அனைத்தையும் நீக்கிட வேண்டும் என்று மின் ஊழியர் மத்திய அமைப்பு முன்முயற்சி எடுத்து வருகிறது. மத்திய அமைப்பின் அழுத்தமான முயற்சியின் விளைவாக சென்ற ஆண்டின் துவக்கத்தில் இருபதவிகளை நிரப்ப தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

2017-ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் தகுதிகாண் அறிக்கையை பெற்ற பின்னரும் அதை இறுதிப்படுத்துவதில் வீணான காலதாமதப்போக்கினை வாரியம் கடைபிடித்து, 2016 டிசம்பரில் மின்வாரிய ஊழியர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகளை வைத்து பல்லாயிரக் கணக்கான ஊழியர்களை திரட்டி காத்திருக்கும் போராட்டம் நடத்திய போது கணக்கீட்டாளர் 2ம் நிலையிருந்து கணக்கீட்டாளர் பதவி உயர்வும், கணக்கீட்டு ஆய்வாளரில் இருந்து வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வும் உடனடியாக வழங்கிட வேண்டும் என்று கோரிக்கை வைத்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இருபதவிகளுக்கான பதவி உயர்வும் காலதாமதம் இன்றி வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள்.

மின் வாரியம் வழக்கமாக வாக்குறுதிகளை அளிப்பது, அதை அமல்படுத்தாமல் இருப்பது என்ற போக்கினை இந்த பதவி உயர்விலும் கையாண்டது. இருப்பினும் மத்திய அமைப்பு இது தொடர்பாக அழுத்தமான நடவடிக்கை எடுத்ததினால் ஜூன் இரண்டாவது வாரத்தில் பதவி உயர்வுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது.

வருவாய் மேற்பார்வையாளரை பொறுத்தவரையில் 600-க்கும் மேற்பட்ட காலி இடங்கள் இருந்த போதிலும் 576 ஊழியர்களுக்கான பேனல் பட்டியல் மே மாத இறுதியில் வெளியிடப்பட்டது மேமாத இறுதிவாக்கிலேயே பேனல் வெளியிடப்பட்ட போது காலி இடங்கள் முழுமையாக

இருந்தும் 75 ஊழியர்கள் அதன் பின்னர் 256 ஊழியர்களுக்கு திட்ட ஒதுக்கீடு என்ற தவணை முறையை கையாண்டது, மத்திய அமைப்பை பொருத்துவரை 600-க்கும் மேற்பட்ட காலி இடங்கள் இருந்த போதிலும் தவணை முறையில் திட்ட ஒதுக்கீடு வழங்கக்கூடாது, பட்டியலில் உள்ள அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கிட வேண்டுமெனவும் இவர்கள் கணக்கிட்டாளராக பணியில் இணைந்த போது இவர்களின் கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு சான்றிதழை ஆய்வு செய்ததை தற்போது மீண்டும் ஆய்வு என்ற பெயரால் காலதாமதம் செய்வது முறையற்றது எனவும் 22.06.2017 அன்று வாரிய அதிகாரிகளை சந்தித்து கடுமையாக வாதிட்டோம் இன்றே வழங்கா விட்டால் ஊழியர்களின் உணர்வுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கப்பட்டது.

அசையாத வாரியத்தை அசையவைக்க வேண்டுமானால் பாதிக்கப்பட்டவர்களை திரட்டி முறையீடு செய்வதை தவிர வேறு வழியில்லை என்ற முடிவோடு 23.06.2017 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களோடு தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 11மணி அளவில் மீதமுள்ள 245 கணக்கீட்டு ஆய்வாளர்களில் 165 ஊழியர்களுக்கு மட்டும் திட்ட ஒதுக்கீடு வழங்குவது என்பதை அறிந்த ஊழியர்கள் வெகுண்டு எழுந்து தலமைப்பொறியாளர் பணியமைப்பு அறைக்கு சென்ற பின்னரே 165 என்ற தடை அகற்றப்பட்டு, மீதமுள்ள அனைவருக்கும் திட்ட ஒதுக்கீடு வழங்கிய பின்னரே தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்திலிருந்து வெளியே வரும் நிலை உருவாயிற்று.

கணக்கீட்டாளரில் இருந்து கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுக்களை தாண்டி பதவி உயர்வுக்காக காத்திருந்த ஊழியர்களுக்கு பேனல் தயாரித்த பின்னரும் பதவி உயர்வு வழங்குவதில் காலதாமதத்தை கடைபிடித்ததோடு பதவி உயர்வு கொடுத்து விட்டால் மின் எரிப்பு கணக்கீட்டிற்கு ஆள் இல்லை என்ற விதாண்டா வாதத்தை முன்வைத்து தடை ஏற்படுத்தியது. வாரியம் ஏற்படுத்திய தடையை 23.06.2017 அன்று கூடிய ஊழியர்களின் கூட்டம் தடைகளையும் விதண்டா வாதங்களையும் நொறுக்கி அன்றே 869 கணக்கீட்டாளர்களுக்கும் பதவி உயர்வை பெற்றுத் தந்தது செங்கொடி இயக்கம்.

இளநிலை பொறியாளர் 2ம்நிலை பதவி உயர்வு வெளியிட காலதாமதம் செய்த போது இதே முறையை கையாண்டு பதவி உயர்வை பெற்றுத் தந்தது மின்ஊழியர் மத்திய அமைப்பு.

இவைகள் மட்டுமல்ல வாரியம் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை முடித்து கணக்கீட்டாளர் பணியையே செய்யும் கணக்கீட்டாளர் 2ம் நிலை ஊழியர்கள் கணக்கீட்டாளராக பதவி மாற்றம் செய்ய வேண்டும் என்பதை பற்றி சிந்திக்காத வாரியத்தை சிந்திக்க செய்து பட்டியல் தயாரிக்க செய்து 1300 கணக்கீட்டாராளர் 2ம் நிலை ஊழியர்களுக்கு கணக்கீட்டாளராக பதவி மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையில் முன்னணியில் இருக்கும் அமைப்பாக மின் ஊழியர் மத்திய அமைப்பு இருக்கிறது.

வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கும் போது கணக்கீட்டு பணியில் உள்ளவர் களுக்கு 25சத பணிசுமை உயர்வை ஏற்க முடியாது என உறுதியாக உள்ளது மத்திய அமைப்பு.

கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களே இப்போதவது புரிகின்றதா மின் வாரியத்தில் இருக்கின்ற செங்கொடி இயக்கம் (மத்திய அமைப்பு) தனது போராட்டங்களின் மூலம் பல சலுகைகளை களப்பிரிவு ஊழியர்களுக்கு பெற்றுத்தருவதோடு மட்டும் நிற்காது கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் அனைத்து நலன்களுக்காகவும் நிற்கின்ற அமைப்பு மின் ஊழியர் மத்திய அமைப்பு.

கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் உரிமைகளின் பாதுகாவலராக விளங்கும் மின் ஊழியர் மத்திய அமைப்போடு கரம்கோர்த்து நிற்போம்!, மேலும் உரிமைகளை பெற்றெடுப்போம் வாரீர்!.





## தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

எண்.27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

# மின்வாரிய காலி பணியிடங்கள் நிரப்புதல்

## நடைமுறைக்கு உதவாத அமைச்சரின் அறிவிப்பு
## காலி பணியிடங்களை நிரப்பிடக் கோரி
## மின்ஊழியர் மத்திய அமைப்பு ஆர்ப்பாட்டம்

| பதவியின் பெயர் | காலிபணியிடம் | அமைச்சர் நிரப்ப அறிவித்த எண்ணிக்கை |
|---|---|---|
| களஉதவியாளர் 10,366<br>கம்பியாளர் 10,392 | 20,758 | 400 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 1,400 | 300 |
| கணக்கீட்டாளர் | 1,100 | 300 |

அமைச்சரின் அறிவிப்பு
யானை பசிக்கு சோளப்
பொரிபோல் இல்லையா ?

அமைச்சரின் அறிவிப்பு
மக்கள் சேவையை
தொடர்ந்திட உதவுமா ?

மின்விபத்துகளை குறைத்து
மின்வாரிய ஊழியர்களின்
உயிரை பாதுகாக்குமா ?

| கடந்த 14 ஆண்டுகளில் மின்விபத்தில் சிக்கிய ஊழியர்கள் | | |
|---|---|---|
| ஆண்டு | உயிரிழப்பு | விபத்துக்குள்ளானவர்கள் |
| 2000 | 41 | 146 |
| 2001 | 57 | 161 |
| 2002 | 4 | 148 |
| 2003 | 65 | 144 |
| 2004 | 45 | 125 |
| 2005 | 26 | 143 |
| 2006 | 34 | 123 |
| 2007 | 38 | 112 |
| 2008 | 37 | 126 |
| 2009 | 49 | 174 |
| 2010 | 54 | 162 |
| 2011 | 58 | 159 |
| 2012 | 66 | 190 |
| 2013 | 56 | 189 |
| 2014 | 55 | 181 |

மாண்புமிகு அமைச்சர் அவர்களே!
அறிவிப்பினை மறுபரிசீலனை செய்திடுக!
அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்பிடுக!
கள உதவியாளர் காலி பணியிடங்களை
ஐடிஐ படித்தவர்களையும்
ஒப்பந்த தொழிலாளர்களையும் கொண்டு நிரப்புக!

**அரசின் வாரியத்தின் கவனத்தை ஈர்க்க**
**15.07.2017ல் மின்வாரிய தலைமையகம்**
**மின் வட்ட தலைமையகம் முன் ஆர்ப்பாட்டம்**

CITU

## தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
## தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் அமைப்பு

எண். 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை – 05.